மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 120 பிறகு எடுத்துக் கொள்ளப்படும். அடுத்த வினா 121.

போலி முடிகள் தயாரிப்பு.

* 121 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அரசுத் துறையில் போலி முடிகள் (டோப்பாக்கள்) தயாரிக்கப்படுகின்றனவா ?

(இ) ஆம் எனில், ஆண்டுதோறும் எவ்வளவு மதிப்புள்ள போலி முடிகள் தயாரிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் போலி முடிகளை (டோப்பாக்கள்) நம் நாட்டில் யார் யார் உபயோகப் படுத்துகிறார்கள், யார் யாருக்கு எல்லாம் உபயோகப்படுத்தக் கூடிய நிலைமை இருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

(விடை இல்லை.)

பக்கிங்ஹாம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டம்.

* 122 வினா—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டத்திற்காக மத்திய அரசின் உதவி ஏதேனும் கேட்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஆம்.

(இ) (1) பக்கிங்ஹாம் கால்வாய் மேம்பாட்டிற்காக ரூபாய் 470 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பெரிய திட்டம் ஒன்று 1964–65-இல் தயாரிக்கப் பட்டு, நான்காவது திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு இதுவரை இசைவு அளிக்கவில்லை.

(2) மாற்றியமைக்கப்பட்ட நான்காவது திட்டத்தில் ரூ. 44 லட்சம் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயில் சில சிறு மேம்பாடுகள் செய்வதற்கான திட்டம் ஒன்று, மாநிலத் துறையின்கீழ் அரசினால் மேற்கொள்ளப் பட்டது. எனினும், மேற்கண்ட திட்டத்தை மத்திய அரசுத் திட்டமாகக் கருத வேண்டுமென்று இந்திய அரசு கேட்கப்பட்டுள்ளது. ரூபாய் 20 லட்சம் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயின் தெற்கு, வடக்குப் பகுதிகளில் மேற்கொண்டும் தூர் எடுப்பதற்காக மற்றொரு திட்டமொன்றும் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் குறித்த செலவு—பயன் விகித ஆய்வு அறிக்கையை அனுப்புமாறு இந்திய அரசு கேட்டுள்ளது. எனவே, இத்திட்டங்கள் ஒப்பளிப்பை எதிர்நோக்கியுள்ளன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் என்ன என்ன அபிவிருத்திகளை அரசாங்கம் செய்திருக்கிறது ? இந்த அபிவிருத்தி வேலைகள் எப்பொழுது முடிவடையும் ? இதற்கு எவ்வளவு செலவாகும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுத் துறையின் சார்பாக சில வேலைகளைத் தொடங்கி இருக்கிறோம். அந்த வேலைகளுக்கு இதுவரை, 31—12—1969 வரை 11.12 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல் : பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங் ஹாம் கால்வாயைச் சீர்திருத்தம் செய்வது என்பது சென்னை மாநிலத்தை மட்டும் பொறுத்த விஷயம் அல்ல. பக்கிங்ஹாம் கால்வாய் உற்பத்தியா வது ஆந்திரப் பிரதேசத்திலாகும். இங்கே, நம் மாநிலத்தில் எப்படி முன்னேற்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவோ, அம்மாதிரி ஆந்திரப் பிரதேசத்திலும் இந்தக் கால்வாயை சீர்திருத்தி மேம்பாடு செய்வதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா ? இது குறித்து நம் மாநில அரசு ஆந்திர அரசுக்குக் கடிதம் ஏதாவது எழுதி யிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங் ஹாம் கால்வாய் தென்னார்க்காடு மாவட்டம், செங்கல்பட்டு மாவட்டம் ஆகிய மாவட்டங்களின் வழியாகச் செல்கிறது. சென்ற புயலுக்கு முன்னால் பல படகுகள் அங்கிருந்து சரக்குகளைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு சென்னைக்கு வந்துகொண்டிருந்தன. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இந்தக் கால்வாயில் தூர் எடுக்காததால், ஆயிரத்திற்கு மேற்பட்ட படகுகள் போக்கு வரத்து நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே இந்தக் கால்வாயில் தூர் எடுத்து, மீண்டும் படகுப் போக்குவரத்தை ஏற்படுத்தும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சுமார் 20 லட்சம் ரூபாய் செலவில் பக்கிங்ஹாம் கால்வாயின் தெற்கு, வடக்குப் பகுதிகளில் மேற்கொண்டும் தூர் எடுப்பதற்கான திட்டம் ஒன்று ஒப்புதலுக் காக இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. கே. விநயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பக்கிங்ஹாம் கால்வாய் ஒரு “ இன்ட்டர் ஸ்டேட் கெனல் ”. இது ஆந்திரப் பிரதேசத்தி லுள்ள மசூலிப்பட்டணத்திலிருந்து நமது மாநிலத்திலுள்ள வேதாரண் யம் வரை செல்கிறது. இந்தக் கால்வாயின் அபிவிருத்தி வேலைகளை நம் மாநிலத்தில் மட்டும் செய்தால் போதாது. மத்திய அரசின் உதவி யுடன் ஆந்திர மாநிலத்துடன் சேர்ந்து இதை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதை “ நேவிகேஷன் கெனலாகச் ” செய்ய ஒரு “ காம்ப்ர ஹன்ஸிவ் ஸ்கீம்” போட்டு அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள, மத்திய அரசாங்கத்திடம் உதவிகேட்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக் கிறதா ? இந்தக் கால்வாயில் படகுப் போக்குவரத்து சீராக நடைபெற அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இப்படி ஒரு ஸ்கீம் ஏற்கனவே போட்டு இதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கி றோம்.

மீனம்பாக்கம் விமான நிலையம்.

***123 வின.—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அறிஞர் அண்ணா விமான நிலையம் என்று பெயர் மாற்றும்படி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.